T-UN-194

உ

கோபுர உதயம்

அருள்மிகு

உலகம்மன் சமேத காசிவிஸ்வநாதர்

திருக்கோயில்

தென்காசி.

தமிழ்நாடு
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை.

அறநிலையத்துறை அமைச்சர்,

மாண்புமிகு வி. வி. சுவாமிநாதன்,
B. Sc., B. L.,

அறநிலையத்துறை ஆணையர்,

திரு. தி. இராச. கல்யாணசுந்தரம்,
இ. ஆ. ப.,

துணை ஆணையர்,

திரு. வே. முனியசாமி, எம். ஏ., பி. எல்.,

உதவி ஆணையர்,

திரு. த. சுந்தரம், பி. ஏ., பி. எல்.,

திரு ஆ. இளையபெருமாள்,
பி. காம்.,
செயல் அலுவலர்.

திரு. ஏ. சி. எஸ்.
குருசாமி நாடார்
நடைமுறை நிர்வாக
அறங்காவலர்

'கோபுர உதயம்'

[தொகுப்பு: புலவர் எஸ். முத்துராமன் எம். ஏ., பி. எட்.]

திருக்கோவில் வரலாற்றுக் குறிப்பேடு.

இறைவன் :

அருள்மிகு காசிவிசுவநாதர்

இறைவி :

அருள் தரும் உலகம்மன்

தலம் :

தென்காசி

தீர்த்தம் :

1 சித்ரகங்கை (சிற்ருறு)
2. காசித் தீர்த்தம்
3. அன்னபூரணி தீர்த்தம்
4. ஆனந்த தீர்த்தம்

தலவிருட்சம் :

செண்பகம்

திருக்கோவில் தோற்றம் :

கி. பி. 1445-ம் ஆண்டு

தோற்றுவித்தவர் :

காசி கண்ட பராக்கிரம பாண்டியர்

குலசேகர பாண்டியர் செய்த திருப்பணி :

இராஜகோபுரம் - திருவோலக்க மண்டபம் விரிவு செய்தல் - உலகமுழுதுடையாள் கோவில்.

அச்சுதேவராயர் செய்த திருப்பணி :

நடுக்கோவில் - பாவாடை மண்டபம்.

தலப்பெருமை :

கலைச் சிற்பங்கள் :

திருஓலக்க மண்டபம் : (மூவகைச் சிற்பம்)

1. இரட்டைச் சிற்பங்கள் :
   (இரண்டு வீரபத்திரர்கள்
   இரண்டு தாண்டவ மூர்த்திகள்
   இரண்டு தமிழணங்குகள்)
2. இணைச் சிற்பங்கள் :
   மன்மதன், இரதி தேவி
3. தனியழகுச் சிற்பங்கள் :
   திருமால், காளிதேவி

பாண்டியரின் வேண்டுகோள் : (கல்வெட்டு)

ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும் பொதுநலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்தனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே.

சேலே றியவயல் தென்காசி யாலயந் தெய்வச் செய
லாலே சமைந்ததிங் கென் செயலல்ல லதனையின்ன
மேலே விரிவு செய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர் தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம பாண்டியனே.

மனத்தால் வருக்கவு மெட்டாத கோயில் வகுக்க முன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன் தென்காசியை
யென்றுமண்மேல்
நினைத்தா தரஞ் செய்தங் காவல் புனையும் நிருபர்பதந்
தனைத் தாந்நின்றஞ்சித் தலைமீதி யாணுந் தரித்தனனே.

அரிகேசரிமன் பராக்கிரம மாற ரைனருளால்
வரிசேர் பொழிலனி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாத மென்
சென்னியதே.

சாத்திரம் பார்த்திங் கியான் கண்ட பூஜைகள் தாம் நடத்தி
யேத்தியன் பால்விசுவ நாதன் பொற் கோயில்லன்
றும்புரக்கப்
பார்த்திபன் கொற்றைப் பராக்கிரம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னினுள் ளார்க்கும் அடைக்கலம் கூறினனே.

ஒன்பது நிலை கொண்ட இராஜகோபுரம் :

ஓங்கு நிலையொன்ப துற்ற திருக் கோபுரமும்
பாங்குபதி னென்று பயில்தூ ணுத் - தேங்கு புகழ்
மன்னர் பெருமான் வழுதி கண்ட தென்காசி
தன்னிலின்றி யுண்டோ தலத்து.

தொடக்கம் :

கி. பி. 1446 காசிகண்ட பராக்கிரம பாண்டியர்
தொடக்கம் செய்தார்

தோற்றம் :

கி. பி. 1462 கோபுரம் முற்றுப் பெருத நிலையில் பரம
பதம் சேர்ந்தார்

கி. பி. 1505 குலசேகரபாண்டியர் முடித்தார்
(ஆதாரம்: கல்வெட்டு)

கி. பி. 1824 வரை நல்ல நிலையில் காட்சி தந்தது
(ஆதாரம்: செனக்கி பாதிரியார் குறிப்புகள்)

சிதைவு :

கி. பி. 1825-ல் நெருப்பினால் சிதைவுற்றதாக தெரிய வருகிறது.

பழுதுபட்ட நிலை :

கி. பி. 1826 முதல் 1966 வரை

அகற்றல் :

கி. பி. 1966ல் கோபுரம் அகற்றப்பட்டது

தென்காசியை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்கள்:
(கி. பி. 1442 — 1605)

காசிகண்ட பராக்கிரமபாண்டியர்
குலசேகரபாண்டியர்
வீரபாண்டியர்
ஸ்ரீவல்லவர்
குலசேகரபாண்டியர் II
அதிவீரராமபாண்டியர்

திருக்கோயில் சொத்து விபரம் :

நஞ்சை : 102.49 ஏக்கர்
புஞ்சை : 23.46 ஏக்கர்
ஆண்டு வருமானம் : ரூ. 3,00,000

மகாதாண்டவர் :

நின்றதாள் நிலத்தில் ஊன்றி - எடுத்ததாள் விண்ணை நோக்க, இடக்கையால் வலக்கால் சேர்த்து வலக்கை அபய ஹஸ்தமாக, ஏனைய ஈரேழு திருக்கரங்களிலும் படைகளும், செங்கோலும் ஏந்திய அழகிய தாண்டவம். இடது திருவடியின் கீழே - மனிதர், விலங்குகள், பறவைகள் மண்ணைக் குறிப்பன. தூக்கிய வலத் திருவடியின் அருகில் தேவர்கள், கோள்கள், உடுக்குலங்கள் விண்ணைக் குறிப்பன. மண்ணில் நின்று - விண்ணை அளப்பது மகாதாண்டவம் !



மகா தாண்டவர்

ஊர்த்துவ தாண்டவர் :

தாண்டவ மூர்த்தியின் இடது திருவடியின் கீழ் திருமாலும் பிரமனும் தாளமிடுகின்றனர். மண்ணில் வாழும் உயிரினங்கள் ஏதுமில்லை. தூக்கிய திருவடியின் அருகில் அண்டப் பெருவெளியே உள்ளது விண்ணில்-ஆகாசப் பெருவெளியில் - முழுமுதற் கடவுளாக காட்டுவது ஊர்த்துவ தாண்டவம்.

ஊர்த்தவ தாண்டவர்

ரதி தேவி :

அன்னப்பேடு அணிநடைபயில, வண்ணப்பூப்பட்டு வலக்காலை மேல் தூக்கி சின்னக்கடிவாளத்தைச் சேர்த்துப் பிடித்தவாறே இரதி தேதி புறப்படத் தயாராகிவிட்டாள்!

ரதி தேவி

ரதி தேவி

மன்மதன் :

இடக்காலை முன்வைத்து வலக்காலை மடித்த நிலையில் கரும்பு வில்லோடும் கையில் மலர்க் கணையோடும் கண்களில் கனிவும், கதுப்புக் கன்னங்களில் அளவான மீசையோடும் - ஆடிவரும் அழகிய காட்சி!



மன்மதன்



அகோர வீரபத்திரர்

திருமால் :

இருவேறு சிறப்பினை இச்சிற்பம் உணர்த்தும்! செந்தாமரைச் செம்பவழ இதழ் குவித்து குழல் ஊதும் ஒரு தோற்றம்!

இந்திரவில் போன்ற எழிலான கரும்பு ஏந்திய ஒரு கரமும், புரிசங்கு, சுடராழி ஏந்தி வலக்காலை மடித்து இடக்காலைச் சாய்த்து நிற்கும் கோலம்!



திருமால் (மகா விஷ்ணு)

காளிதேவி :

எட்டுத் திருக்கைகளிலும் படை ஏந்தி ஓடிவரும் கோரமான காளிதேவியின் ஆங்கார தோற்றம்.

காளி தேவி



தமிழணங்கு : (ஒப்பனை நிலை)

சிங்காரக்கண்ணாடி நோக்கி செந்தூரத்திலகமிடும் தமிழணங்கு - தென்றலில் விளைந்த நாணல் போல வந்து நிற்கும் திருக்கோலம் !

தமிழணங்கு

தமிழணங்கு : (ஒய்யார நிலை)

வலக்கை விரல் வந்து விட்டார் அதோ என்று காட்ட பாதணிகள் அணிந்து யாரை எதிர் நோக்குகிறாள்? அச்சம், நாணம் தோன்ற அச்சத்தையும் மடத்தினையும் அழகிய கால் வளைவிலும், காட்டும் காட்சி.



தமிழணங்கு

அக்னிவீரபத்திரர்

இவர் சமரவீரபத்திரர். கொழுந்துவிட்டெரியும் அச்கினி மகுடமும் கொப்பளிக்கும் சினவழிகளும் குமுற் திரிசூலம் தண்டு, வாள், கேடயம் எண்கரங்களும் ஏந்தி விரைந்த நடையில் போருக்கு எழுந்துவரும் தோற்றம்.